மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் - 07



**K.SUNSAGAR**
CP/W.ARUNODHAYA HINDU COLLEGE

*வலப்பனை கல்வி வலயம்*

# பந்தி அமைத்தல்

- ✓பந்தி என்பது கூறவந்த விடயத்தை தெளிவாகவும் ஒழுங்காகவும் கூறுவதற்கு உகந்த பண்பாகும்.

- ✓பந்தி பிரதான பண்பு ஒன்றினை கொண்டிருக்கும்.

- ✓பிரதான கருத்திற்கு வலுச்சேர்க்க பல துணைக் கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்.

- ✓பந்தி என்பது தொடர்புடைய விடயங்களை கொண்டதாக கட்டுறுக்கமுடையதாக இருத்தல் சிறப்பானதாகும்.

# சிறந்த பந்தியொன்றின் பண்புகள்

- ✓தலைமை கருத்தைக் கொண்டிருத்தல்
- ✓தலைமைக் கருத்தை ஐயந்திரிபுற உறுதியாக முன்வைப்பதாகும்
- ✓பொருத்தமான துணைக்கருத்துக்கள், உதாரணங்கள், விளக்கம் என்பனவற்றைக் கொண்டிருக்கும்.
- ✓வாசகரின் மனதிலெழக்கூடிய வினாக்களுக்கு விடை தரக்கூடிய வகையில் அமைந்திருக்கும்

# பந்தியொன்றை எழுதும்போது தவிர்க்க வேண்டியவை

- ✓கூறியது கூறல்
- ✓மிகைப்படக் கூறல்
- ✓முரண்படக்கூறல்
- ✓பொருத்தமற்ற, தேவையற்ற விடயங்களைக் கூறல்
- ✓தேவையானது கூறாது விடுதல்
- ✓தெளிவற்ற விதத்தில் கூறல்

# மாதிரிப் பந்தி 01

வரலாறுகளை இரு பிரிவில் அடக்கலாம். ஒருவன் தன் வரலாற்றை எழுதுவது ஒன்று. பிறர் வரலாறு எழுதுவது மற்றொன்று. வாழ்க்கை வரலாறு எழுதுவது இலகுவானதன்று. வாழக்கையில் நிகழ்ந்த சுவையான அம்சங்களை இதில் உள்ளடக்க வேண்டும்.

# மாதிரிப் பந்தி 02

கடிதம் எழுதுதல் என்பது ஒரு கலையாகும். அது மேனாட்டு மொழிகளில் சிறப்பாகக் காணப்படுகிறது. ஒருவர் ஒரு காலத்தில் எழுதிய கடிதங்கள் பிற்காலத்தில் போற்றப்படுகின்றன. நேரு, இரவீந்தரநாத் தாகூர், புதுமைப்பித்தன் இதற்கு சான்றுகளாகும். இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள் இன்றும் மாணவர்கள் கற்கின்றார்கள்.

# மாதிரிப் பந்தி 03

நாடகம் என்ற சொல்லுக்கு விளையாட்டு என்பது பொருள். அதாவது ஒழுங்கான விளையாட்டு. விளையாட்டு எனும் போது நடித்தல் என்பதே அதன் செயல். நடிப்பில் இரண்டு வகை உண்டு. ஒன்று கருத்துக்களை நடித்தல். மற்றொன்று கதைகளை நடித்தல் என்பனவாகும்.

பின்வரும் Link பயன்படுத்தி வினாக்களை செய்து பார்க்கவும்.

https://forms.gle/yBAeCq1MVUG8Qpt1A

# நன்றிகள்